**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**

**அசல் வழக்கு எண்**.39/2023

**2026 ஆம்** வருடம் செப்டம்பர் மாதம் 08 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதுரை | ஜாதி | : | |
| க.பெ | : | சங்கப்பன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வளையபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2026 |
| தேதி | : | 08.09.2026 | | | |

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

முத்துச்சாமி, கருப்பாயி இருவருக்கும் மகனோ, மகளோ இல்லை என்றால் சரிதான். முத்துச்சாமியின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். முத்துச்சாமியின் சட்டப்படியான வாரிசுகள் 2, 3 பிரதிவாதிகள் தான் என்றால் சரிதான். முத்துச்சாமியின் வீடு 2, 3 பிரதிவாதிகளுக்கு தான் சேரும் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் நீங்கள் தாக்கல் செய்துள்ள OS.No.73/2019 ன் தீர்ப்புரை நகலில் பிரதிவாதிகள் ஆஜராகாததால் ஒருதலை பட்ச தீர்ப்பு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். OS.No.73/2019 ல் 2, 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

OS.No.73/2019 ன் தீர்ப்புரை பத்தி 9 ல் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 15 ன் படி இறந்துபோன பெண்ணின் சொத்தானது முதலில் அவரது மகன் மற்றும் மகள் மற்றும் கணவருக்கும் மேற்படி நபர்கள் இல்லாத நிலையில் கணவரின் வாரிசுகளுக்கும், அதன்பின்பு தாய், தந்தையருக்கும் சென்றடையும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே தாவா சொத்தில் 1 ம் பிரதிவாதி குருசாமிக்கு சட்டப்படி எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். 1ம்

பிரதிவாதி, வாதிக்கு 23.02.2023 அன்று எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் தற்போது வரை 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 11.11.2016 ஆம் தேதியில் 2ம் பிரதிவாதியின் தம்பி மனைவியான கருப்பாயியிடம் இருந்து சரியான மறுபயன் கொடுத்து பதிவு செய்யாத கிரைய பத்திரத்தின் மூலம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 24.08.2023 ஆம் தேதி உங்களுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நீங்கள் பெற்றுக்கொண்டு எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் அறிவிப்பு வரவில்லை.

வாதி அமராவாதிக்கும், 1ம் பிரதிவாதி குருசாமிக்கும் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
**Athoor**